**செய்தி வெளியீடு எண்.391** **நாள் – 28.6.2007**

# தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களில் டைட்டானியம் டை– ஆக்ஸைடு தொழிற்சாலை

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து

டாடா ஸ்டீல் நிறுவனம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களான தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் டைட்டானியம் டை –ஆக்சைடு (Titanium Di-oxide) தொழிற்சாலையை 2500 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்திடத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சுரங்கப் பணி மற்றும் அதன் மூலம் கனிமங்களைப் பிரித்து எடுத்தல், சிந்தடிக் ரூட்டைல் (Synthetic Rutile) தயாரித்தல், உச்ச அளவில் மதிப்புக் கூட்டப்பட்ட டைட்டானியம் டை ஆக்ஸைடு சாயப் பொருள் தயாரித்தல் முதலியவற்றை மேற்கொள்ளும். இத்திட்டம் ஏறத்தாழ 1,000 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகள் வழங்கும்; மேலும், வேளாண் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த மறுசீரமைத்தல் பணி மூலம் ஏறத்தாழ 10,000 பேருக்குத் தொடர் வாழ்க்கை வசதிகள் கிடைக்கவும் வழிவகுக்கும்.

டாடா ஸ்டீல் நிறுவனம், இத்திட்டத்திற்காக நிலம் வழங்கியோரின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும்; மற்றும் அக்குடும்பத்திலுள்ளவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறத்தக்க வகையில் அவர்களுக்குத் தகுந்த பயிற்சிகளையும் அளிக்கும். மேலும், டாடா ஸ்டீல் நிறுவனம் சுரங்கப் பணி முடிக்கப்பட்ட நிலங்களில் பணப் பயிர்களைப்

பயிர்செய்யும் அளவிற்கு அவற்றைச் சீரமைத்து மேம்படுத்தி, அதன் மூலம் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குத் தொடர் வாழ்க்கை வசதிகளும், வேலை வாய்ப்புகளும் கிடைக்க உதவும். டாடா ஸ்டீல் நிறுவனம் தங்களது டைட்டானியம் டை–ஆக்ஸைடு திட்டத்திற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் தொழிற்சாலை மற்றும் மின்தொழிற்சாலை ஆகியவற்றையும் நிறுவும்.

இத்திட்டம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படுவதால் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும். மேலும், இத்திட்டம் இப்பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உதவும். தமிழக அரசு இத்திட்டத்திற்குத் தேவைப்படும் உதவிகளையும், சலுகைகளையும் அளிக்கும்.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் இன்று (28.6.2007) தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர், திரு.சக்திகாந்த தாஸ், டாடா ஸ்டீல் நிறுவனத்தின் சார்பில் அதன் நிர்வாக இயக்குநர் திரு. பி. முத்துராமன் ஆகியோர் கையொப்பமிட்டனர். இந்நிகழ்வின்போது, டாடா குழுமத்தின் தலைவர் திரு. ரத்தன் என். டாடா, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் மற்றும் ஆணையர் திரு இ. தசரதன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9